விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆடி 6 ஜூலகஃ 14 இதழ் 161

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 22-7-1986

இந்திய தூதரக செயலர் பூரி—

## 3 மணிநேர யாழ். விஜயம்

### கணபதியுடன் கொழும்பு திரும்பினர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கை கடற்படையினர் கடலில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது மயிரிழையில் காயங்களுடன் உயிர்தப்பி யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த தமிழக மீனவரான கணபதியை இலங்கையிலுள்ள இந்தியத்தூதரகத்தின் முதலாவது செயலாளர் திரு. பூரி நேற்று யாழ்ப்பாணம் வந்து தம்முடன் அழைத்துச் சென்ருர்.

திரு பூரி நேற்றுக் காலை 11 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரிக்குச்சென்ருர். ஹெலிகாப்டர் மூலம் யாழ் கோட்டையில்வந்திறங்கிய திரு பூரி அங்கிருந்து யாழ் ஆஸ்பத்திரிக்கு நடந்து சென்ருர் திரு பூரியின் உபசரணையாளராக யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. இராமநாதன் செயல்பட்டார்

யாழ் ஆஸ்பத்திரி வைத்

(5ம் பக்கம் பார்க்க)

# கிழக்கிலங்கையில் தனிமாநிலம் முஸ்லிம்கள் கோருகின்றனர்

## யு. என். ஐ.யிடம் 'அமிர்' தகவல்

(சென்னை)

கிழக்கு இலங்கையில் ஒரு முஸ்லிம் மாநிலம் அமைக்கப்படவேண்டும் என்று முஸ்லிம்கள் குழு தமிழர் விடுதலைக் கூட்டணியை வலியுறுத்தியுள்ளது. இத்தகவலைத் தற்போது கொழும்பில் தங்கியிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

''கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்புக்குத் தென் பகுதியில் முஸ்லிம் மாநிலம் ஒன்று அமைக்கப்படவேண்டும்'' என்று கூட்டணிக்கும் முஸ்லிம் குழுக்களுக்குமிடையிலான பேசசுவார்த்தைகளின் போது முஸ்லிம் குழுக்களினுல் தம்மிடம் வற்புறுத்திக்கூறப் பட்டதாக திரு. அ. அமிர்தலிங்கம் யூ என் ஐ. நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் இரண்டு முக்கிய முஸ்லிம் குழுக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகள் குழுவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியபோதே தனியான முஸ்லீம் மாநிலம் பற்றி வற்புறுத்திக்கூறப்பட்டது,

தமிழர்கள் முஸ்லிம்களுக்குக்கிடையே மொழிவழிக் கருத்து ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் இப்பேச்சுவார்த்தை அமைந்திருந்ததாகவும் இது தொடர்பாக

(5ம் பக்கம் பார்க்க)

● க. பொ. த. உயர்தரம்

## பரீட்சை குழப்பப்பட்டால் மீண்டும் நடத்தப்படாது!

### -வவனியாவில் ரணில்

வவனியா, திங்கள்.

அடுத்தமாதம் நடைபெறவுள்ள க. பொ. த உயர்தரப் பரீட்சைக் காலத்தின்போது வடக்கு கிழக்குப் பகுதிகளில் பரீட்சையைப் பாதிக்கக்கூடிய சம்பவங்கள் ஏதும் நடைபெற்ருல் தடைப்பட்ட பாடங்களுக்கான பரீட்சைகள் மீண்டும் நடத்தப்படமாட்டாது'' என கல்வி இளைஞர் வேலை

(5-ம் பக்கம் பார்க்க)

## கூட்டணிஆதரவு முஸ்லிம்குழு இன்று அமிரைச் சந்திக்கும்

[நமது நிருபர்]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோரிக்கைகளுக்கு கிழக்கிலங்கை முஸ்லிம்கள் எதிரானவர்களல்ல என்பதைத் தெளிவுபடுத்தும்வகையில் முஸ்லிம் தூதுக்குழுவொன்று இன்று கொழும்பில் தங்கியிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களைச் சந்திக்கவுள்ளது.

அதேசமயம் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நலஉரிமைகளும் பாதுகாக்கப்படுவதற்கு உத்தரவாதமளிக்கப்படவேண்டுமென்றும் இந்தமுஸ்

(5ம் பக்கம் பார்க்க)

த. வி. கூட்டணி நேற்று——

## அதிகாரப் பரவல், காணி விவகாரம் பற்றி பேச்சு!

[சென்னை]

மாகாணசபை யோசனைகள் சம்பந்தமாக தமிழர்விடுதலைக் கூட்டணி பிரதிநிதிகள் ஜனுதிபதி ஜெயவர்த்தனுவுடன் நேற்றுமீண்டும் பேச்சுவார்த்தை நடத்தியது.

இப் பேச்சுவார்த்தைகளின் போது மாகாண சபைகளின் அதிகாரப் பரவலாக்கம் குறித்து முக்கியமான கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

ஜனுதிபதியுடன் நடைபெற்ற இச் சுற்று பேச்சுவார்த்தை சுமார் ஒன்றரைமணித்தியாலம்வரை நீடித்ததாக யூ. என் ஐ செய்தி ஒன்று தெரிவித்துள்ளது

இப் பேச்சுவார்த்தைகளின் போது கூட்டணிக் குழுவுக்கு திரு. அ அமிர்தலிங்கம் தலைமைதாங்கினுர்.

இது இவ்வாறு இருக்க

(5ம் பக்கம் பார்க்க)

பூநகரியில்

## பாடசாலைக் கட்டிடம் குண்டினுல் தகர்ப்பு

பூநகரி, திங்கள்

பூநகரியில் இருகட்டிடங்கள் இனந்தெரியாதவர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. கடந்த ஞாயிறு இரவு இச்சம்பவம் இடம் பெற்றது

பரம்பன் கிராயிலுள்ள பெருந்தெருக்கள் திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடம் சங்குப்பிட்டிப்பிரதான வீதியிலிருந்த அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக் கட்டிடமுமே தகர்க்கப்பட்ட கட்டிடங்களாகும் சங்குப்பிட்டி வீதி, யாழ்ப்பாணம், பூநகரி, மன்னுர், பரந்தன் புதலிய இடங்களுக்குச் செல்லும் ஒரு பிரதான வீதியாகும்.

இப்பாடசாலைக் கட்டிடத்தில் அரச பாதுகாப்புப்படை முகாமிடவிருப்பதாவும் பரவலாக இப்பகுதியில் வதந்தி அடிபட்டது.

## பிரயாண ஒழுங்குகள்

%%%%%%%%%%%%%%%%

● கனடா ● டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் உங்களை நேரடியாக அழைத்துச் செல்வார். சவூதி அரேபியாவுக்கு தொழிலாளராக (Labour) செல்வோர்க்கு இம்மாதம் 22, 23, 24ந் திகதிகளில் பிரயாண ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பாஸ்போட், முற்பணம் கொடுத்தவர்கள் 21,22ந் திகதிகளில் காரியாலயத்தில் சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பு:

N. BALA

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

பஸ்வழி இல:
764, பலாலி வீதி,
கோண்டாவில்.

[C-3601]

## வவனியாவரை ரயில்சேவை காசுக்கட்டளைமூலம் டிக்கட்

யாழ்ப்பாணம்,செவ்வாய்

கொழும்பிலிருந்து வவனியா வரையிலான புகையிரத சேவை நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப் புகையிரத சேவையை முன்னிட்டு வவனியா புகையிரத நிலையத்தில் பலத்த இராணுவப் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

வவனியா- யாழ்ப்பாணம் இணைப்பு பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தபோதும் கடந்த சனிக்கிழமை நெடுங்கேணியில் ஏற்பட்ட அசம்பாவிதத்திற்கு ஆட்சேபம் தெரிவித்துப் போக்குவரத்துச் சேவை இயங்காத காரணத்தினுல் யாழ்ப்பாணத்திலிருந்து எந்த பஸ்களும் வவனியா செல்லவில்லை.

இதன் காரணமாகச் சுமார் 300 க்கு மேற்பட்ட பிரயாணிகள் யாழ்ப்பாணத்திலிருந்து பஸ்கள் செல்லாததால் பெரும் சிரமத்திற்குள்ளானுர்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் பிரயாணிகள் காசுக்கட்டளை கொடுத்தே டிக்கற் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் பாதுகாப்புக் கருதியும், சொந்த நலன் கருதியும் பெரிய பார்சல்களை எடுத்துச் செல்ல வேண்டாம் என்றும் பிரயாணிகள் கேட்கப்பட்டுள்ளார்கள். [வா]

## சேதமுற்ற தொண்டமானுறு நீர்ப்பாசன பாலத்தை ராணுவம் திருத்துகிறது!

வல்வெட்டித்துறை, திங்

தொண்டமனுறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் பின்புறமாகவுள்ள நீர்பாசன அணைக்கு அருகிலுள்ள ஆற்றுக்குக் குறுக்கேயுள்ள நடைபாதைப் பாலத்தைச் சீரமைக்க முயற்சிகள் நேற்றுமுதல் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சுவாமியார் வீதி கொழும்புத்துறையில் 1½ பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- T. அஜந்தாகுமார், 7/12, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. [C 3617]

இறக்குமதி செய்த மீன் சாப்பாடு[Fish Max] மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு M. G. M 777, K K S Road, and 208, 1st Cross St. Jaffna. Telephone 22611. (A 920)

சங்கானையில் 21½ நிலப் பரப்பு பனங்காணி, யாழ் நகர எல்லைக்குள் K. K S. வீதியிலிருந்து 50யார் தூரத்தில் 3 கடைகள் களஞ்சிய அறைகளுடனும் விற்பனைக்குண்டு தொடர்பு:- வண்ணை ஏஜென்சி. 41. பிரப்பங்குளம் ரோட், வண்ணார்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். அல்லது 302/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் [C-3478]

தேக்கு அல்மாரி. Nursery அல்மாரி, கட்டில்கள்; Bab - Cot, National Blender, Akai செற், Sharp டெக் செற். Rice குக்கர். கிளாஸ் வகைகள், பித்தளைக் கிடாரம், Formica சாப்பாட்டு மேசை, கதிரைகள், கண்ணாடி மேசை, Showcase மற்றும்பல உடன் விற்பனைக்குண்டு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (மாவடிச் சந்தி). (C-3547)

## தேவை

பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர் தேவை. வயது 40 க்கும் 60 க்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும். நற்சாட்சிப் பத்திரத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும். சீமாட்டி, ரெக்ஸ்ரையில், 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [C 3564]

தமிழ், ஆங்கிலம், புதிய பழைய தட்டச்சு யந்திரங்கள் [Typewriters] உடன் தேவை தொடர்பு: Fudo Enterprises, 39/17, மின்சாரநிலைய வீதி, [3-ம் ஒழுங்கை], யாழ்ப்பாணம். (C 3590

நல்ல நிலையிலுள்ள நடுத்தர அல்லது அதற்கு மேற்பட்ட லேத்மெஷின் ஒன்று தேவை விலை விபரம் அளவு முதலிய விபரத்துடன் தொடர்பு கொள்ளவும். A. S. அன்ரனிப்பிள்ளை, 222, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [C3597]

ஆங்கிலம், தமிழ், அச்சுக் கோர்க்கக்கூடிய அனுபவமுள்ள அச்சுக்கோர்ப்பவர் தேவை. நடைமுறை ஊதியம், சகாயநிதி செலுத்தப்படும். இலக்கம் 6, குமார வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். C 3611

முற்றிலும் தன்னியக்க இயந்திரங்கள் மூலம் தயாரானது




★ தெய்வீகமானது
★ உருகாது
★ கருகாது
★ நெடுநேரம் எரியக்கூடியது
★ பிரகாசமானது

(A-768)

## வகுப்புகள்

Computer Programming [Basic Radio T.V repairing. Wiring, Draughtsmanship வகுப்புகள் ஆரம்பம் 23--7-86 புதன், 26-7-86 சனி விபரங்கட்கு: Able Technical Studies [Jet motors மேல்மாடி] K. K. S. Road, Chunnakam. [C-3522]

இதோ! ரியூசன் எல்லாப் பாடத்திலும் அனுபவ ஆசிரியர்கள் தயார். பாடங்களையும் வகுப்புகளையும் குறிப்பிடவும். தொடர்பு: மங்கள ஏஜென்சி, சொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [C3589]

## சேவை

யாழ் நகரில் தரமான ''போட்டோஸ்ரற்'' பிரதிகள் தெளிவான ''ரோனியோ'' பிரதிகளைத் திருப்தியான முறையில் பெற்றுக்கொள்ள; கிளீன்கட், 239, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (C 3488)

ரான்ஸ்போமர், மோட்டர், மின்விசிறி அடுப்பு, கிறைண்டர், வாசிங்மெசின், ஸ்ராட்டர், றிப்சுவிச் ஆகியன திருத்த, றீவைண்டிங்செய்ய, வீட்டு வயறிங்செய்ய ஒமேகா, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம். [ஈழநாட்டிற்கு எதிரில்] பழுதடைந்த மேற்குறிப்பிட்ட உபகரணங்கள் விலைக்கும் வாங்கப்படும். (C-3552)

## வெற்றுச் சாக்கு கேள்விப்பத்திரம்

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கீழ்வரும் வகையான வெற்றுச் சாக்குகள் விற்பனைக்காக கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது கொள்வனவு செய்யவிரும்புவோர், தலைவர், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், புலோலி கிழக்கு, பத்தித்துறை என்ற முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் 28-07-86 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பத்தை அனுப்பிவைக்கவேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ''வெற்றுச் சாக்கு கேள்விப்பத்திரம்'' எனக்குறிப்பிடவேண்டும். கேள்விப்பத்திரத்துடன் மீளளிக்கும் வைப்புப்பணமாக ரூபா 250/- செலுத்துதல் வேண்டும். வைப்புப்பணம் இடாதோரின் கேள்விப்பத்திரம் எதுவித காரணத்தையிட்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இதற்கான வைப்புப்பணத்தையும், விண்ணப்பப்படிவத்திற்கான ரூ 5/ ஐயும் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ளலாம். உரிய பணத்தை நேரடியாகவோ இன்றேல் தபால் காசுக்கட்டளை மூலமாகவோ அனுப்பிவைத்தால் கேள்விப் பத்திரம் உரியவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

வெற்றுச் சாக்குவிபரம்

| | |
|---|---|
| 1. மா. (பெரிது) | 368 |
| 2. மா (சிறிது) | 563 |
| 3. அரிசி நம் 1 | 137 |
| 4. அரிசி 1 அந். | 582 |
| 5. சீனி | 492 |
| 6. நவதானியம் | 125 |
| 7. இழக்கம் | 621 |
| 8. சர்க்கரை | 33 |
| 9. கற்கண்டு | 09 |
| 10. பை | 70 |
| மொத்தம் | 3000 |

கழிவு சீனி — 233 கிலோ.

பொதுமுகாமையாளர்,

1986-07-18.

[A-947]

## கல்வி

மீண்டும் கிடைக்கும் - A/L ஆகஸ்ட் 86 மாணவரின் வேண்டுகோளுக்கிணங்க 8 வருட கடந்தகால வினாக்களும், விடைகளும் தமிழ், இந்துநாகரிகம், வணிகமும் நிதியியலும் உயர் கல்விப் பதிப்பக வெளியீடுகள். உங்கள் புத்தக வியாபாரியை அணுகுக. (C 3618)

## தவறிவிட்டது

19-7-86 அன்று 1-00 மணிக்கும் 4-00 மணிக்குமிடையில் யாழ்ப்பாணத்திலிருந்து மாதகல் செல்லும் பஸ்ஸில் எனது போட்டோ பிரதிகள் அடங்கிய அல்பம், ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு அறிவிக்கவும். எஸ். சசிதரன், மசேந்திரா கிளாஸ் தொழிற்சாலை, இல 9, கண்டி ரோட், நாவற்குளி. C 3614

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## வேல் திருவிழா

யாழ்ப்பாணம், செவவாய் வளலாய்ப் பிள்ளையார் கோவில் வேல்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

## 2-வது வருட நினைவஞ்சலி



திருமதி
பராசக்தி (தேவி)
இராசரத்தினம்

அன்புடன் நினைவுகூரும்:
அன்புக்கணவர்,
அருமை மகள்.

மீசாலை தெற்கு,
மீசாலை. (A 944)

## பண்டத்தரிப்புப் பரிஷ் பல. நோ. கூ. சங்கம், மின்தறி இயந்திரங்களை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி கோரல்

சங்க மின்தறி ஆலையில் 16 ஜப்பான் மட்சுகாவா Matsu-kawa) மின்தறிகளும் 16 இந்தியன் பிரிமியர் (Premier) மின்தறிகளும் உள்ளன. இவைகளுக்குத் தாராளமாக ஊடை நூல் விநியோகிக்கக் கூடிய ஊடைநூல் இயந்திரங்களும் (Pirn winder) பாவோடும் இயந்திரமும் (Warping Machine) நல்ல நிலையில் இருக்கின்றன.

மேற்கூறப்பட்ட இயந்திரங்களைக்கொண்டு மாதாந்த குத்தகையில் புடவை தயாரிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. மேற்கூறப்பட்ட இயந்திரங்களைப் பார்வையிட விரும்புவோர் சங்க காரியாலய நேரங்களில் பார்வையிடலாம். கேள்விப் பத்திரங்களும் அத்துடன் விதிமுறைகளும சங்கத்தில் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். திருப்பப்பெறப்படும் வைப்பு ரூபா 1000/-வும், திரும்பப்பெறப்படாத வைப்பு ரூபா 250/ம் கட்டி பற்றுச்சீட்டு வாங்கியவர்கட்கே விண்ணப்பப்பத்திரங்கள் வழங்கப்படும். விண்ணப்பப் படிவங்கள் பெற வேண்டிய கடைசித் திகதி 28-07-86. கேள்விப்பத்திரங்கள் யாவும் பொதுமுகாமையாளர் பண்டத்தரிப்புப் பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு. என விலாசமிடப்பட்டு இலச்சினை பொறிக்கப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படவேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'மின்தறி இயந்திரங்களுக்கான குத்தகைக்கான கேள்வி'' எனக்குறிப்பிடப்பட்டு 29-07-86 நண்பகல் 12-00மணிக்கு முன்னதாக எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,

பண்டத்தரிப்பு
பரிஷ் பல நோ. கூ. சங்கம்.
21-07-1986.

(A-949)

## கொப்பரு தேவை

வாங்குமிடம்:
சோதி ஸ்ரோஸ்
கோண்டாவில் சந்தி.

[A-791]

## வாடிக்கையாளர்களுக்கு

கலர் பிலிம் சுருள்களை பாதுகாப்பான முறையில் கொழும்புக்கு அனுப்பி Processing செய்து கொடுக்கும் சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளோம்.

SAKURA — KONICA கலர் பிலிம் விற்பனைக்குண்டு.

Sakura Photo Suppliers,
233/1-1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


[C 3586]

## ஒரு நற்செய்தி!

மீண்டும் 'ஹலோ' சீரடைந்து விட்டது

இன்ரநாஷனல் கொமினிகேஷன் கொம்பிளெக்ஸ்

International Communication Complex.




282 A, யாழ்ப்பாண வீதி,
மானிப்பாய்.

உள்நாட்டு-வெளிநாட்டு
தொலைபேசி (Telephone)

★ தொலைத்தொடர்பு (Telex)

★ பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே நிம்மதியாக, நேரடியாக உலகின் எப் பகுதிக்கும் தொடர்புகொள்ள-

★ இரவு-பகல் 24 மணி நேரமும், வாரம் பூராவும் தொடர்ச்சியான சேவையைப் பெற

தன்னியக்க மின்பொறிக் கருவிகள் பொருத்தப்பட்ட ஒரே ஒரு நவீன

தகவல் தொடர்பு நிலையம்!

(A 777)

# சீன - இந்திய எல்லை குறித்த பேச்சுக்கள் பீக்கிங்கில் ஆரம்பம்

பீக்கிங், ஜூலை 21

இந்திய—சீன எல்லை குறித்த பேச்சுவார்த்தைகள் இன்று பீக்கிங்கில் ஆரம்பமாகியது இரு நாடுகளுக்குமிடையில் இடம்பெறும் ஏழாவது சுற்றுப்பேச்சு இதுவாகும்.

சிலதினங்கள் இடம்பெறும் இப் பேச்சுவார்த்தைகளுக்கு இந்தியத் தரப்பில் வெளியுறவுச் செயலர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் தலைமை வகிப்பார். துணைஅமைச்சர் திரு. லியூ-சூ-பெங் சீனக்குழுவுக்குத் தலைமைவகிப்பார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னோடியாக இந்திய வெளியுறவுசெயலர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரனுக்கு நேற்றுமுன்தினம் அரசவிருந்தொன்று பீக்கிங்கில் அளிக்கப்பட்டது விருந்தில் கலந்துகொண்ட வெளியுறவுச் செயலர் "இந்த புதிய சுற்றுப் பேச்சுக்கள் நல்ல பயனைத் தரும்" என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்த வைபவத்தில் கலந்துகொண்ட சீனத் துணைஅமைச்சர் திரு. லியூ-சூ-பெங் "எல்லைப்பிரச்னைக்குமிக விரைவிலேயே தீர்வுகாண்பதற்கும் இருதரப்பு உறவுகளை மேலும் பேணி வளர்க்கவும், இரு தரப்புகளும் நட்புறவுடன் கொண்ட ஒத்துழைப்பு உணர்வுடன் தொடர்ந்து உழைக்கும்" என்று தெரிவித்தார். (ரா)

## நேபாளத்தில் இந்திய குடியரசுத் தலைவர்

காட்மண்ட், ஜூலை 21

இந்திய ஜனாதிபதி திரு. ஜியானி ஜெயில்சிங் நேபாளத்துக்கான ஐந்துநாள் அரசபயணமொன்றினை மேற்கொண்டு இன்று காட்மண்ட் செல்கிறார்.

இந்தியத்தலைவரை வரவேற்கும்வகையில் தலைநகரான காட்மண்ட் கலைரசனைமிக்கதாக அலங்காரம்செய்யப்பட்டுளது. விமானநிலையத்திலிருந்து திரு. ஜெயில்சிங் தங்குவதக்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள அரண்மனை வரையிலான பத்து கிலோ மீட்டர் தூரம் நெடுகிலும் தொடர்ச்சியான வரவேற்பு வளையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## "பாஸ்கட்போல்"

# சாம்பியன் பட்டத்தை அமெரிக்கா வென்றது

மெட்ரிட், ஜூலை 21

உலக "பாஸ்கெட்போல்" சாம்பியன் பட்டத்தை அமெரிக்கா வெற்றிகொண்டுள்ளது.

இந்த சாம்பியன் பட்டத்துக்கான போட்டி ஸ்பெயினின் தலைநகரான மெட்ரிட்டில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெறறது. அப்பொழுது தம்மை எதிர்த்து விளையாடிய சோவியத்யூனியனை 87—85 என்ற மிகக்குறைந்த புள்ளிகளைப் பெற்றதின் மூலமே அமெரிக்காவுக்குஇந்த வெற்றி கிடைத்துள்ளது.

இவேளை மாஸ்கோவில் நடைபெற்ற நல்லெண்ண விளையாட்டுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் முடிவடைந்துள்ளது.

இவ் விளையாட்டுக்களில் இடம்பெற்ற பதினொரு படகோட்டப் போட்டிகளில் சோவியத்யூனியன் ஒன்பது வெற்றிகளைப் பெற்றுள்ளதுடன், எடை தூக்கும் போட்டியில் மூன்று தங்கப்பதக்கங்களையும், ஜூடோவில் இரண்டு தங்கப் பதக்கங்களையும் பெற்றுள்ளது மொத்தமாக சோவியத் 118 தங்கப்பதக்கங்களையும், அமெரிக்கா 42 தங்கப் பதக்கங்களையும் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (ரா)

உலகச் செய்திகள்

# இன்று நடக்கும் ஹர்த்தால்; 'முஸ்லிம்குரல்' விளக்கம்

யாழ்ப்பாணம், செவ்

கடந்த 24ம் திகதி அன்று முஸ்லிம் பகுதியில் நடைபெற்ற குண்டுவீச்சு படுகொலைச் சம்பவத்தை கண்டித்தும். நீதிகேட்டு நியாயமான தீர்ப்பை வழங்குமாறு கோரியும் முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து ஹர்தாலுடன் கூடிய ஊர்வலம் ஒன்றை இன்று காலை புதிய சோனகத் தெரு பள்ளிவாசல் முன் நடாத்தவுள்ளனர்.

இதுதொடர்பாக 'தமிழ் ஈழத்தில் முஸ்லிம்களின் குரல் மக்கள் சிந்தனைக்கு' என்ற தலைப்பில் "யாழ் முஸ்லிம் பொதுமக்கள்" பிரசுரமொன்றினை வெளியிட்டுள்ளனர்

இப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சில அம்சங்கள் வருமாறு:

"யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரிச் சந்தியில் முஸ்லிம் இளைஞர் அமைப்பைச் சேர்ந்த கோஷ்டியினர் பயங்கர ஆயுதங்களைக் கொண்டு, ஒரே சமூகத்தில் வாழும் வாலிபர்களைத் தாக்கினார்கள் இறுதிக் கட்டத்தில் 'கிரனேட் குண்டு' வீசியதால் மூன்று உயிர்கள் பலியானதுடன 22 பேர் படுகாயமடைந்தனர்.

"கொலைகள் நடைபெற்றதை அறிந்த ஓர் இயக்கம் அதில் சம்பந்தப்பட்டவர்களை விசாரணை செய்வதற்காக அழைத்துச் சென்றார்கள். விசாரணை முடிந்ததும் கால தாமதம் இன்றி தண்டனை வழங்குவோம் என்று உறுதி அளித்தபடியினால் திரண்டெழுந்த மக்கள் சற்று சமாதானம் அடைந்தார்கள்.

"இஸ்லாமிய சமூகம் தனிச் சமூகம். அதற்கென சலுகைகைகள் இருக்கன்றது. அதனால் முஸ்லிம் மக்களிடம் தண்டனை கொடுக்கும்படி கையெழுத்து வாங்கித் தரும்படி கேட்டார்கள் கையெழுத்து வாங்கிக் கொடுத்தோம் பின் இணக்கசபை ஒன்று அமைக்கப்பட்டது. யாழ். முஸ்லிம்இணக்க சபையின் இறுதிநாள் முடிவிலே இயக்கத்தின பிரதிநிதி கலந்து கொண்டார்.

"யாழ். முஸ்லிம் இணக்க சபை ஏகமனதான அபிப்பிராயத்தினை எழுத்து மூலமாக இயக்கப் பிரதிநிதியிடம் கையளித்தது. அந்தப்பிரதிநிதி நாளையே தண்டனையை அளிக்கப்போவதாக வாக்குறுதி அளித்துச் சென்றார். இன்று வரும் நாளை வரும் என்ற நிலையிலே நாங்கள் காத்திருந்தோம். பலநாட்கள் ஆகிவிட்டன இதனால் நீதிகேட்டு இன்று போராட்டம், ஊர்வலம் ஹர்த்தால், கடையடைப்பு ஆகியவற்றை செயல்படுத்தும் நிலைக்கு வந்துவிட்டோம்." [ஐ[

# இந்திய - சோவியத் வைத்திய ஒப்பந்தம்

புதுடில்லி, ஜூலை 21

வைத்தியதுறையில ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கு வகைசெய்யக்கூடிய புதிய ஒப்பந்தம் ஒன்றில் இந்தியாவும், சோவியத்யூனியனும் கைச்சாத்திட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஒப்பந்தத்தில் சோவியத்யூனியன் சார்பில் திரு பி ஏ. குர்சஸவும் இந்தியதரப்பில் மத்திய சுகாதார செயலர் திரு. எஸ். தானுகாவும் கைச்சாத்திட்டுள்ளனர்.

இதய அறுவை, கல்லீரல் சம்பந்தமான நோய்கள் பற்றிய ஆய்வுகளை நடத்தவும் இரு நாடுகளுக்கான நிபுணர்களை பரிமாறிக்கொள்ளவும் இந்த ஒப்பந்தம் உதவியாக இருக்கும் என்று கூறப்பட்டது. (ரா)

## மண்சரிவில் பலர் மரணம்

புதுடில்லி. ஜூலை 21

உத்தரப்பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மீண்டும் ஏற்பட்ட மண்சரிவினால் மேலும் மூவர் பலியாகியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து தொடர்ச்சியான இரண்டுநாள்மண்சரிவுகளினாலும்இறந்தோர் தொகை பதினொரு பேராக அதிகரித்துள்ளது [ரா]

## கூட்டுறவுச்சங்கங்கள் துக்கதினம் அனுஷ்டிக்கும்

யாழ்ப்பாணம், செவ்.

அப்பாவி மக்கள் கொல்லப்படுவதையும், அவர்களின் சொத்துக்கள், உடமைகள் சேதப்படுத்தப்படுவதையும் கண்டித்து எதிர்வரும் வெள்ளிகிழமை சகல கூட்டுறவுச் சங்கங்களும் துக்க தினம் அனுஷ்டிப்பதென தெல்லிப்பழை பல நோககுக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற சங்கத் தலைவர்கள் மகாநாடு ஒன்றில், தீர்மானிக்கப்பட்டுள்ளது.

25-ம் திகதி வெள்ளிக்கிழமை, சங்கங்களில் கறுப்புக்கொடிகள் பறக்கவிட்டு சங்கங்களைப் பூட்டி ஒவ்வொரு சங்க எல்லைப் பிரதேசத்தில் கண்டனக் கூட்டங்கள் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. [வா]

# அரசியல் கட்சிகளின் மாநாடு தமிழர் பிரச்னையை தீர்க்காது

யாழ்ப்பாணம், திங்கள்

"தமிழ் பேசும் மக்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசியல் கட்சிகளின் மாநாட்டில் வைக்கப்பட்டுள்ள யோசனை தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை எவ்விதத்திலும் பூர்த்தி செய்யாது. இது திட்டமிட்டு அரசு, தன்னை ராணுவ ரீதியில பலப்படுத்திக் கொள்ள எடுக்கப்படும் நடவடிக்கையாகும் எனவே இதனை நாம் நிராகரிக்கிறோம். உண்மையில் அரசு இனப்பிரச்னைக்கு தீர்வுகாண விரும்பின் போராளிகளுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டும் அதுவே உண்மையான தீர்வுக்கு வழிவகுக்கும்"

இவ்வாறு 'தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதெற்கெதிரான போராட்டத்திற்கான இணைப்புக்குழு' விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

'பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும் போது, எந்த ஒரு நாட்டிலும் போர் நிறுத்தம் அமுலில் இருக்கும். ஆனால் இங்கு பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும் போதே அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்திருந்த அகதிகள் உட்பட 300 க்கு மேற்பட்ட குடி மக்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் தமிழ்பிரதேசங்களில் உள்ள இராணுவ முகாம்களுக்கு தென்னிலங்கையிலிருந்து மேலதிக இராணுவம் கொண்டு வந்து குவிக்கப்படுகிறது

"எனவே தேசிய பிரச்னை தொடர்பாக எமது இணைப்புக்குழுவினால் முன்வைக்கப்பட்ட ஆறுஅம்சக் கோரிக்கைகளின் அடிப்படையில் தீர்வுகாணுமாறு தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்டத்திற்கான இணைப்புக்குழு வலியுறுத்துகின்றது."

## காங்கிரஸ் (ஜே)யில் பிளவு

புதுடில்லி, ஜூலை-21

காங்கிரஸ் (ஜே) கட்சி இரண்டு பிரிவுகளாக பிளவுபட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருபிரிவுக்கு திருமதி இந்திராணிதேவி தலைவராகவும், மற்றப் பிரிவுக்கு தற்பொழுது தற்காலிக தலைவராக இருந்துவரும் திரு. ஹர்பன்சிங் பர்லா தொடர்ந்து தலைவராக இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. [ரா]

## மாணவர் ஆரோக்கிய பயிற்சித்திட்டம்

கொழும்பு, திங்கள்

பாடசாலை மாணவர்களின் ஆரோக்கியம் சம்பந்தமான நடைமுறைப்பரிசுத்திட்டம் ஒன்றின்கீழ் ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்களுக்குப் பரிசு அளிக்கப்படவிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் கல்வித்திணைக்களத்தின் உதவியுடன் இவ்விசேஷ பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

சிறுவர்களுக்கு ஏற்படும் நோய்களை ஆரம்பத்தில் கண்டுபிடித்தல், இந்நோய்களுக்கான சிகிச்சைமுறைகள் பற்றி இப்பரிசுகளின்போது அறிவுறுத்தப்படுவதுடன், போஷாக்கு உணவு தயாரிக்கப்படுவதுபற்றியும் பயிற்சி அளிக்கப்படும்.

1988-ம் ஆண்டின் இறுதியில் சுமார் 30 ஆரம்ப ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படும் என்றும், இப்பயிற்சி நெறி நாட்டின் சகல கல்வி மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்றும் கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [வா]

## வருடாந்த உற்சவம்

பண்டத்தரிப்பு, திங்கள்

சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 16ம் திகதி ஆரம்பமானது.

எதிர்வரும் 24ம் திகதி சற்பிரசாத சுற்றுப்பிரகாரமும் 25ம் திகதியன்று திருப்பலியும், திருச்சுருவ பவனியும் நடைபெறவுள்ளது, சில்லாலை பங்குத் தந்தை அருட் திரு. ப. இருதயதாஸ் அடிகள் பூசைகளை நிறைவேற்றுவார்.

### மணிவாக்கு

பெண்கள் இருவகைப்பட்டவர். மனிதனை முட்டாளாக்குபவர் ஒருவகை; முட்டாள்களை மனிதராககுபவர் மற்றொரு வகை.

—ஓர் அறிஞன்

## நமது நோக்கு

# போல் நல்லநாயகம் தொண்டர்க்கு நாயகம்

சட்டத்துக்கமைந்த ஆட்சிக்கு சுதந்திர நீதிபரிபாலனம் இன்றியமையாததென பிரதம நீதியரசர் எஸ். சர்வானந்தா தமது பேருரையில் வற்புறுத்தியிருந்தார். இன்றேல் கொடுங்கோன்மையும் அராஜகமுமே நாட்டில் தலைவிரித்தாடுமென்பது கண்கூடு.

ஆங்கில நாவலாசிரியர் சார்ல்ஸ் டிக்கின்ஸ் எழுதிய 'இரு நகரின் ஒரு கதை' நினைவுக்கு வருகிறது. பிரதம நீதியரசர் குறிப்பிட்ட சுதந்திர நீதிபரிபாலனத்துக்கு போல் நல்லநாயகம் வழக்கின் தீர்ப்பு ஒரு நல்ல உதாரணம்; பாலைவனமாக மாறிவரும் 'பரடைஸில்' இது ஒரு பசும் புற்றரையெனலாம்.

கொலைக்காளான ஆயிரம் ஆயிரம் அப்பாவி மக்களை விட இன்று 'பூஸா'வில் தொற்று நோய்களும் அது தொடர்பான பல இன்னல்களுக்கும் சித்திரவதைக்குமிலக்கான ஆயிரம், ஆயிரம் தமிழ் இளைஞர்கள் கொடுங்கோன்மைக்கும் அராஜகத்துக்கும் நல்லதோர் எடுத்துக்காட்டு.

தொற்றுநோய் ஆஸ்பத்திரியாகக் காட்சியளிக்கும் பூஸா இராணுவ முகாம், வெலிக்கடை சிறைச்சாலை சம்பவத்துக்கு இடமளிக்கலாகாதென்று இன்றைய தினத்தில் கதிர்காமத்தில் வீற்றிருக்கும் (சிறை இருக்கும்) கந்தனை வேண்டுகின்றோம்.

தெய்வத்தைத் தவிர இந்த நாட்டில் வேறுயாரை இங்கு வாழும் தமிழ் மக்கள் உதவிக்கழைப்போம்?

சிறையில் வாடுபவர்கள் பெரும்பாலான இளைஞர்கள் திருமலை, மட்டக்களப்பு அம்பாறையைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களின் பெற்றோர் இது சம்பந்தமாக பிரஜைகள் குழுவுக்கு முறையிட்டுள்ளனர் என்றும் செய்தி குறிப்பிடுகிறது. தெய்வத்துக் கடுத்தது பிரஜைகள் குழு.

இந்தநிலையில் வளத்தில் வருகிறது விடயம்; அது என்ன? போல் நல்லநாயகத்தின் இரண்டாவது வழக்கு; நீதிக்குக் கிடைத்த இரண்டாவது வெற்றி

யார் இந்தப் போல் நல்லநாயகம்? அவரை அறியாதவர் நாட்டின் நடப்பைப்பற்றி ஒன்றும் அறியாதவரே.

அவர் இன்று கனேடியப் பிரஜையென்பது பற்றி விளக்கம் அவசியமில்லை. கல்முனைப் பிரைஜகள் குழுவின் முன்னாள் தலைவரென்பதே மிக முக்கியமான அறிமுகம்.

அவருக்கு எதிரான அவதூறுக்குற்றச்சாட்டு (Sedition) வழக்கில் — நீண்டகாலம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில், இன்று சில பகுதிகளில் சிவில் ஆட்சி ஸ்தம்பித்திருக்கும் போது, பாராளுமன்றப் பிரதிநிதிகள் பதவியிழந்திருக்கும்போது பிரஜைகள் குழுத்தலைவரின் பெரும் பொறுப்பு வற்புறுத்தப்பட்டிருந்தது.

போல் நல்லநாயகத்துக்கு எதிராக அவசர [அராஜக] காலச்சட்டத்தின் கீழ்க் கொண்டுவந்த ஏழு குற்றச்சாட்டுகளும் நிராகரிக்கப்பட்டதோடு, நீதவான் அவருக்குப் புகழ்மாலையும் சூட்டியது உண்மைக்கு என்றும் அழிவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது.

அது அவ்வாறுக, சும்மா கிழிக்கிற கிழங்குக்கு ஆப்பும் சம்மட்டியுமேன் என்ற கேள்விக்கு இவ்வழக்கு இடமளிக்கின்றது.

மனித உரிமைகள் வழக்கில், பல்லாயிரக் கணக்கில் பலியாகும் இந்கநாட்டு மக்களுக்கு ஒரு பிரதிநிதியாகத் தனித்து நின்று வாதாடிய வீரன் நல்லநாயகம். இந்த வழக்கில் குற்றவாளியாகசிறையில் பூட்டப்படுவார், கிழக்கிலங்கை அநந்துவிடும் என்ற அச்சம் அதிகம் இருக்கவில்லை. வடக்குக்கும் கிழக்குக்கும் இணைப்புத் தூதுவராகவே திகழ்ந்தார்.

அரசாங்கத்திற் கெதிராக மக்களிடம் சாழ்ப்புணர்ச்சியையும் வெறுப்பையும் தூண்டிவிட்டாரென்ற குற்றச்சாட்டு சாதாரணமானதல்ல. அதற்குப் போதிய சான்றும் ஆவணங்களும் அரசுதரப்பில் இல்லாத போதும், சர்வதேசப் புகழ் பெற்ற ராணி அப்புக்காத்து எஸ். நடேசனைத் தவிர வேறு யார் இதனைத் தவிடுபொடியாக்க முடியும்? கம்பியூட்டர் யுகத்தில் பாக்கு வெட்டி என் செயும்?

இந்த வகையில் நாம் எழுப்பும் சந்தேகம் நியாயமானதே. பிரசை யாராயிருந்தாலும் எந்த சமூகத்தவராலும் தபது அடிப்படை உரிமை காரணமாகவோ, அல்லது பொது நலசேவை காரணமாகவோ இத்தகைய இக்கட்டில் மாட்டிக்கொள்வாராலுல் எத்தனைபேர் சுதந்திர நீதிமன்றத்தின் நீதியைச் சுவைக்க முடியும்? எத்தனைபேர் இத்தகைய வழக்கில், என்றும் பணியாற்றத் தயாராயிருக்கும் திரு நடேசன் போன்றோரின் உதவியைப் பெற முடியும்?

பிரஜைகள் குழுவிற்குத் தலைமை தாங்கும் தகைமையுடைய நல்லநாயகத்துக்கு இக்கதி நேருமானால் சாமானிய பிரஜைகளின் நிலைமையை விளக்கவும் வேண்டுமா?

துன்பம் தோய்ந்த இந்த நீண்ட கதையின் சுவையான பகுதியை நாம் இங்கு குறிப்பிடாமல் விட முடியாது.

''அதிரடிப் படையினருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை மாற்றிக் கொண்டால் அவரது விடுதலை குறித்து யோசிப்பதாக அமைச்சர் ஒருவர் கூறியிருந்தபோதும், தனது உண்மை நிலையை விட்டுக் கொடுக்காத அவரது மதிப்பான தன்மையை நீதிமன்றம் தனது கவனத்தில் கொண்டுள்ளது'' என்பதே நீதவான் தீர்ப்பில் இடம்பெற்ற புகழ்மாலை.

பிரஜைகள் குழு தலைவன் மக்கள் தொண்டன், அவ்வித தொண்டரனைவர்க்கும் நாயகமாக விளங்கும் நல்லநாயகம் பல்லாண்டு வாழ்க!

---

### "தமிழர் போராட்டங்களில்

# பேராசிரியர் நேசையா அறவழியில் உழைத்தவர்"

## உபவேந்தர் வித்தி பாராட்டுரை

சாவகச்சேரி, திங்கள்

''தமிழருடைய வரலாற்றில் கடந்த 26 வருடங்கள் ஒரு சோதனைமிக்க காலமாக இருந்து வருகின்ற போதிலும் தமிழ்த் தலைவர்கள் நடாத்திய போராட்டங்களில் அவர்களுக்கு துணையாக இருந்து அறவழியிலே பெரிதும் உழைத்தவர்பேராசிரியர் நேசையா ஆவார்''

இவ்வாறு யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில், அறவறிப் போராட்டக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட பட்டமளிப்பு, பாராட்டு விழாவின் போது ஆரம்பப் பேருரை நிகழ்த்தும் போது தெரித்தார்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அங்கு, பேராசிரியர்கு நேசையாவுக்கு, அறவழி போராட்டக்குழு சார்பில் 'அறநெறிக் காவலர்' எனும் சிறப்புக் கௌரவப் பட்டத்தினை அளித்ததுடன், பனம் பொருள்களால் தயாரிக்கப்பட்ட பரிசுப் பொருட்களையும் வழங்கி, கதராடையும் போர்த்தினர்.

பேராசிரியர் வித்தியானந்தன் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்தியதாவது:

'பேராசிரியர் நேசையாவிடம் காணப்படுகின்ற இன உரிமைப் பாங்கையும், மன உறுதியையும், அதற்கும் மேலாக, காந்தீயக் கோட்பாட்டிலே அவர் கொண்டுள்ள கொள்கை உறுதியையும், நான் பல காலகட்டங்களில் அனுபவ ரீதியில் பார்த்து மெச்சியிருக்கின்றேன். தமிழ் மக்களுடைய உரிமைகளை நாம் அறவழியில் போராடிப் பெறல்வேண்டும் என்று கருதி, தந்தை செல்வாவின் வலக்கரம் போல அவருடன் இணைந்து அறவழியில் போராடியவர். இன்றும்கூட பேராசிரியர் நேசையா தந்தை செல்வாவின் வழியில் அவருடைய கொள்கைளைப் பின்பற்றி தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெறவேண்டும் என்று செயற்பட்டு வருகிறார்' என்றார்.

கலாநிதி நந்தி தமது ஆசியுரையின் போது,

'இந்த நாட்டின் கல்விச் சரித்திரத்திலே பேராசிரியர் நேசையாவின் பெயர் பெருமையுடன் பொறிக்கப்படும், அத்தோடு பேராசிரியர் நேசையா தனித்துவம், சுதந்திரம், கல்விச் சுதந்திரம், கலாச்சாரம், தன்னம்பிக்கை போன்ற துறைகளில் காட்டி வருகின்ற ஆர்வம் எமக்குப் படிப்பினையாகவுள்ளது'' என்றார்.

---

## தீவுப்பகுதியில் ரோந்து நடவடிக்கை

வேலணை, ஞாயிறு

அனலைதீவு எழுவைதீவு நயினாதீவுப் பகுதிகளைச்சுற்றி கடற்படையினர் தினமும் பாரிய பீரங்கிப் படகுகள் சகிதம் ரோந்து புரிந்துவருகின்றனர்.

இந்த பீரங்கி படகில் இருந்து அடிக்கடி பலத்த குண்டு வெடிச் சத்தங்களும் தீவின் கரைகளை நோக்கி கேட்பதால் இத்தீவில் உள்ள மக்கள் பயத்துடன் வாழ்ந்து வருகிறார்கள்.

---

## பழைய தபாலகத்தில் பணியாற்ற உத்தரவு

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் தலைமைத் தபாலகத்தை மீண்டும் யாழ். கோட்டைக்கு முன்பாகவுள்ள தலைமைத் தபாலகத்தில் இயங்கும் படியும் தபாலக ஊழியர்களை கோட்டைக்கு முன்பாகவுள்ள தபாலகத்தில் கடந்த திங்கள் முதல் கடமையாற்றும் படியும் மேலிடம் பணித்துள்ளதாகத் தெரியவருகிறது

தற்காலிகமாக யாழ். தலைமைத் தபாலகம் கடற் கரை வீதியில் இயங்கி வருவது தெரிந்ததே. (ஐ)

---

### சுகாதார ஊழியர்கள்

## திணைக்கள அடையாள அட்டை அணியவேண்டும்

பண்டத்தரிப்பு, திங்கள்

சுகாதாரத்திணைக்கள ஊழியர்கள் தங்கள் கடமைநேரத்தில் திணைக்கள அடையாள அட்டையை யாவருக்கும் தெரியும்படியாக அணிந்திருக்கவேண்டுமென்றும், இதற்கமைவாக நடக்காத ஊழியர்களுக்குத் தினமொன்றுக்குப் பத்து ரூபா குற்றப்பணம் விதிக்கப்படுமென்றும்கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையொன்றில் அறிவித்துள்ளது.

நாட்டிலுள்ள சகல சுகாரத் திணைக்கள பிரதேச அலுவலகங்களுக்கும் மற்றும் அரசினர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்தசுற்றறிக்கையில் நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் சுகாதாரத்திணைக்கள ஊழியர்களுக்கு திணைக்களம் வழங்கும் அடையாள அட்டை மிகவும் முக்கியத்தும்வாய்ந்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடமைநேரத்தில் சீருடை தரிக்கும் தாதிகள், மருத்துவ மாதர்கள், பல் வைத்தியர்கள் மற்றும் உத்தியோகபூர்வ 'பாட்ஜ்' அணியும் ஊழியர்கள் ஆகியோருக்கு இந்தத் திணைக்கள அடையாள அட்டை அவசியமில்லை என்றும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### ஒடுக்கப்பட்ட மக்களின்

## அமைப்புக்களை ஒன்றுபடுத்தி கிராமியகாங்கிரஸ்உருவாகும்?

புலோலி, திங்கள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் அமைப்புக்களை ஒன்றுபடுத்தி அவற்றைக் கிராமிய தொழிலாளர் காங்கிரஸ் என்ற பெயரில் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணிப் பொதுச்செயலாளர் சட்டத்தரணி எம். சிவகுருநாதன் மேற்கொண்டுள்ளார்.

கடந்த காலத்தில் சிறுபான்மைத்தமிழர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், சமூகமக்கள் என இம்மக்கள் கூட்டம் அழைக்கப்பட்டுவந்ததுடன் இப்பெயர்களைத் தாங்கியே இம்மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்டுவந்த ஸ்தாபனங்கள இயங்கிவந்தன. ஆனல் இன்று சகல தமிழ் மக்களும் தமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் இவ்வேளையில் குறிப்பிட்டமாதிரியான பெயர்களின் கீழ் இந்த மக்களை ஸ்தாபனப்படுத்துவது பொருக்தமற்றதாகும். சமுதாய மாற்றத்தையும் இலட்சியத்தையும் கருத்திற்கொண்டு ஸ்தாபன அமைப்புக்களை மாற்றியமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி சிவகுருநாதன் தெரிவித்தார்.

திரு. தொண்டமான் தலைமையில் இயங்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்தியத்தோட்டத்தொழிலாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்டிருந்தபோதும் அதன் அமைப்புமுறையினாலும், பெயரினாலும் ஏனைய இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் அங்கத்தவர்களாகச் சேர்வதற்கு கதவடைப்புச் செய்யவில்லை அதேபோல் கிராமிய தொழிலாளர் காங்கிரசில் அங்கத்தவர்களாகச் சேர்வதற்கு மறுப்புத்தெரிவிக்கப்படமாட்டாது. இத்தகைய அமைப்புமுறை தாழ்த்தப்பட்ட மக்களின் வரலாற்றில் ஒரு புரட்சிகரமான மாற்று நடவடிக்கையாகும் என்றும் சட்டத்தரணி சிவகுருநாதன் தெரிவித்தார்.

---

## அகதிகள் புனர்வாழ்வுக்கு கலைநிகழ்ச்சி

விசுவமடு, திங்.

அகதிகள் புனர்வாழ்வு நிதிக்காக விசுவமடு கிராம அபிவிருத்தி மன்ற ஆரவில் எதிர்வரும் 26-ம் திகதி சனிக்கிழமை முழு இரவு நிகழ்ச்சியாக பல்சுவை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

விசுவமடு மகாவித்தியாலத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில், பல பாடசாலை மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும், மாவை நாட்டுக்கூத்து கலைமன்றத்தின் 'மாலைக்காக வாதாடிய மைந்தன்' என்னும் இசை நாட்டுக்கூத்தும் இடம் பெறவுள்ளது.

---

## நிரந்தர நிதியத்துக்காக

சாவகச்சேரி, திங்கள்

நிரந்தரமான அகதிகள் புனர் வாழ்வு நிதியம் ஒன்றினை ஏற்படுத்தும்பொருட்டு அறவழிப்போராட்டக்குழு யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் தயாரிப்பான 'மண் சுமந்த மேனியர்' அங்கம் 2 ஐ மிகவிரைவில் கைதடியில் மேடையேற்ற விருக்கின்றது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். கலாச்சாரக்குழுவுடன் இணைந்து அறவழிப்போராட்டக்குழு செய்துவருகிறது.

# பொலநறுவை கிராமங்களில் தாக்குதல்: பலர் பலி

கொழும்பு, செவ்வாய்

பொலனறுவையில் நான்கு கிராமங்களில் கடந்த சனிக்கிழமை ஆயுதந்தாங்கிய இனந்தெரியாத கோஷ்டி ஒன்று மேற்கொண்ட தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது.

திருகோணமலை-பொலநறுவை மாவட்ட எல்லைப்பிரதேச கிராமங்களில் இனந்தெரியாத ஆயுதம்தாங்கிந் குழுவொன்று மேற்கொண்ட தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டதாகவும் மூவர் காயமடைந்ததாகவும் அரசு அறிவித்துள்ளது.

இதற்கிடையில் கொழும்பிலிருந்து வெளிவரும் தினசரி ஒன்று இத்தாக்குதல் சம்வங்களினல் 21 பேர் பலியானதாகவும், 25 பேர் காயமடைந்ததாகவும் 20 வீடுகளுக்குத் தீ வைத்ததாகவும் செய்தி வெளியிட்டுள்ளது. [வா]

## சேதபுற்ற...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு வருகின்றன.

இப்பாலம் சீரமைக்கப்படின் பலாலி, தொண்டமனாறு முகாம்களிலுள்ள படையினர் கால்நடையாக வருவது இலகுவாக அமையுமெனத் தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் தமிழ்ப் போராளிகளின் தீவிர கண்காணிப்பு இப்பகுதியிலிருப்பதால் படையினரால் அப்பாதையை திருத்துவது இலகுவாக இருக்காது எனவும் பேசிக்கொள்ளப்படுகிறது.


## 2-வது நினைவஞ்சலி



**து. பஞ்சலிங்கம்**
(மனேமாஸ்டர்)

தோற்றம்: 09-04-1956
அழிப்பு: 22-07-1984

ஓ! என் தோழர்களே!
எல்லோரும் விழித்
தெழுங்கள்
சிங்கள சிறைவுகளில்
விடுதலை தேடப்புறப்
பட்டவர்களே!
சிந்தித்துப்பாருங்கள் சில
நிமிடம் என்றவுடன்
உன்னைத் தெருவினிலே
சவமாக்கி
ஓடி ஒளித்தார்கள்
வீரமைந்தர்கள்
மக்களை! மக்களை மட்
டுமே நீ நேசித்ததனல்
உரிமை கோராது உயி
ரைப்பறித்தனர்
மண்ணை நேசிக்கும் அந்த
மகத்தான வீரர்கள்
பாட்டாளிகளின் சரித்
திரத்தை பகல் இரவாய்
சொல்லி வந்தாய்
என்பதால்
முன் எச்சரிக்கையாய்
முதலாளித்துவ சர்வாதி
காரம் வீதியிலே மீண்டும்
தமிழ் இரத்தத்தை
சிதறவைத்தது
வேலியே பயிரை மேய்
வது உண்டு
மீன்களுக்கு மீன்களே
பலியாவதும் உண்டு
இங்கே விடுதலைப்
பூக்களின் குருதியால்
தேசமே நனைகிறது
மக்களே! விடுதலையின்
பேருக்கு
இவன் இரத்தமும்
அஞ்சலியா?

குடும்பத்தினர்,
ஊர்மக்கள், உறவினர்,
நண்பர்கள்.

கொம்மந்துறை,
வல்வெட்டித்துறை.

C 3630


## வைத்திய அதிகாரியாகப் பொறுப்பேற்றார்

புலோலி, திங்கள்

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை (மந்திகை) மாவட்ட வைத்திய அதிகாரியாக மகப்பேற்று வைத்திய நிபுணர் ஆ. குழந்தைவடிவேல் பொறுப்பேற்றுள்ளார்.

## இந்திய---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திய அத்தியட்சகர் டாக்டர் நச்சினார்க்கினியனை திரு. பூரி சந்தித்தார். அங்கு பிரஜைகள்குழுப் பிரமுகர்கள் மற்றும் பிரமுகர்கள் சமூகம் தந்திருந்தனர்.

'வார்ட்டில்' அனுமதிக்கப்பட்டிருந்த இந்தியமீனவரான திரு. கணபதியை திரு. பூரி சென்றுபார்த்து நலன் விசாரித்தார். பின்னர்திரு. பூரி யாழ். ஆயர் இல்லம் சென்றார். அங்கிருந்து அகதிகள் புனர்வாழ்வுக்கழகக் காரியாலயம் சென்று அகதிகளுக்குப் புனர்வாழ்வுக்கழகம் செய்து வரும் சேவைகளையிட்டு அதன் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பியுடனும் அதிகாரிகளுடனும் உரையாடினர். பின்னர் நல்லூர்க்கந்தசுவாமி கோவில் சென்று தரிசித்தஅவர் நல்லூர இந்துவிடுதிக்குச் சென்று மாநகரசபை அதிகாரிகளையும் சந்தித்தார்.

பிற்பகல்இரண்டு மணியளவில் யாழ் வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் நச்சினார்க்கினியன் திரு. கணபதியை திரு பூரியிடம் ஒப்படைத்தார்.

திரு பூரி கணபதியை அழைத்துக்கொண்டு யாழ் கோட்டை சென்று அங்கிருந்தும் ஹெலிகாப்டர் மூலம் கொழும்பு சென்றார்.

திரு கணபதி கொழும்பிலிருந்து விமானமூலம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஐ]

## அதிகார...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காணிக்குடியேற்றம் சம்பந்தமாக மாகாணசபைகளில்தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பாக காணி, காணி அபிவிருத்தி மகாவலி அமைச்சர் திரு. காமினிதிஸநாயக்காவை கூட்டணிபிரதிநிதிகள் குழு திரு அ. அமிர்தலிங்கம் தலைமையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியது என்றும் அச்செய்தி மேலும் தெரிவித்துள்ளது. (வா)

## பரீட்சை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்புத்துறை அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

இன்று காலை வவனியாவுக்கு விஜயம் செய்த அமைச்சர் வவனியா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே இதனைக்கூறினர்.

விசேட விமானமொன்றின் மூலம் தச்சன்குள ஆயுதப் படை முகாமுக்கு வந்தஅமைச்சரை வவனியா மாவட்ட இணைப்பதிகாரி கேணல் கொப்பேகடுவ உட்பட உயரதிகாரிகள் பலர் வரவேற்றனர் பின்னர் வவனியா மகாவித்தியாலயத்திற்குக் சென்ற அமைச்சர் கூட்டமொன்றில் உரையாற்றினர்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள பரீட்சைகள் சிறப்பாக நடைபெற பிரஜைகள் குழுக்கள் கல்விப்பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள் பரீட்சை மேற்பார்வையாளர்கள், நலன் விரும்பிகள் அனை வரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் யாழ். வன்னி, மன்னர், கிளிநொச்சி மாவட்ட கல்விப்பணிப்பாளர்கள், வவனியா உயர்தர பாடசாலைகளின் அதிபர்கள், கல்வி அமைச்சின் செயலாளர் திரு விஜேமான கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ரணதுங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கிழக்கில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் பேச்சுவார்த்தைகள் தொடரும் என்றும் திரு. அமிர்தலிங்கம் யூ. என். ஐ. நிருபருக்கு மேலும் தெரிவித்துள்ளார். (ா)

## மட்டக்களப்பில் பொலிஸ்ரோந்து

மட்டக்களப்பு செவ்

மட்டக்களப்பு மவட்டத்தில் பெரும்பாலும் அதிரடிப் படையினரைவிட பொலிஸ் ரோந்து தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் தனியார் வாகனங்கள் நிறுத்தும் நிலையத்துக்கு நேற்று திங்கட்கிழமை சென்றபொலிசார் 3 வாகனங்களை எடுத்துக் கொண்டு ரோந்து சுற்றினர்.

ரோந்து சென்ற பொலிசார் தமது கண்ணில்பட்ட சில இளைஞர்களை அவ்விடத்திலேயே வைத்து விசாரணை செய்தபின் அவர்களை விடுவித்தனராம்.

கடந்த மூன்று நாட்களாக கிராமப் புறங்களில் ஆயுதப் படையினர் தலைகாட்டவில்லையாம். [மா]

## மட்டு. பூமரச்சோலையில் ஆயுதப்படை தாக்குதல்

### ஒருவர்பலி வீடுகள் தீக்கிரை!

மட்டக்களப்பு, செவ்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பூமரச்சோலைப் பகுதியில் ஆயுதப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பொது மக்களில் ஒருவர் பலியானர்; பலர் படுகாயமுற்றனர்.

நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம் பெற்றது.

இப்பகுதிகளில் 5 வீடுகளும் ஆயுதப் படையினரால் தீவைத்து எரிக்கப்பட்டதால் அவை முற்றாக எரிக்கப்பட்டன. [மா]

## காமன்வெல்த் பந்தயங்கள் இலங்கையும் பகிஷ்கரிப்பு

கொழும்பு, திங்கள்

இங்கிலாந்தில் எடின்பரோவில நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதில்லையென இலங்கை அறிவித்துள்ளது.

இதுதொடர்பான அறிக்கையொன்று வெளிவிவகார அமைச்சு அலுவலகத்திஞல் நேற்று வெளியிடப்பட்டது

நிறத்துஷேத்திற் கெதிரான தென்னுபிரிக்க கறுப்பின மக்களின் நடவடிககைகளுக்கு இலங்கையின் ஆதரவை தெரிவிக்கும் வகையில கவனமாக மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையை யடுத்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த விளையாட்டுப் போட்டியிலிருந்து வாபஸ் பெற்றுக் கொள்ளும் இருபத்தியாருவதுநாடு இலங்கையாகும் என்று தெரிவிக்கப்பட்டது. [து]

## நினைவுதினக் கூட்டம்

நெல்லியடி, திங்கள்

மறைந்த வடபகுதி சமசமாஜத்தலைவர்களுள் ஒருவரான திரு சி. தர்மகுலசிங்கத்தின் நினைவு தினம் ஆகஸ்ட் 3ம் திகதி வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

திரு. ஏ ரோயசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்ச்சியில் நவசமசமாஜக் கட்சித் தலைவர் திரு வாசுதேவ நாணயக்கார உட்பட பல தென்னிலங்கை சமசமாஜப் பிரமுகர்கள் பங்குபற்றவுள்ளனர்

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்.வண் நாவலர்மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாக சபை உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர் தலைவர் திரு ப.சிவஞானசுப்பிரமணியம், உபதலைவர் திரு.வி. ஹரிதாஸ்,இணைச் செயலாளர்கள் திரு மு.பெரியானம்பலம் திரு. வி கே இரமசாமி, பொருளாளர் திரு ஐ துரைராஜா, கணக்காய்வாளர் திரு செ.யோகராஜா பத்துப் பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். [சிவ]

## 'ஐன்ஸ்டினும் மணிவாசகரும்'

யாழ்ப்பாணம செவ்.

''சிந்தனைக் கருவூலங்களே சைவத் திருமுறைகள சைவத் திருமுறைகளைப் பொருந்துணர்ந்து கற்போர்க்குத் தெளிவாகும் கருத்துக்கள் அறிவியல்நோக்கிலும் சரியானவை எனக் காணலாம்,''

இவ்வாறு, யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மாணிக்கவாசகர் குருபூஜை விழவில் கரவை கிழார் கந்தசுவாமி குறிப்பிட்டார்.

அதிபர் திரு. மு. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் விஞ்ஞானி ஐஸ்டினின் கொள்கை எதனைக் குறித்து நின்றதோ அதனை ஐஸ்டினனுக்குப் பல காலங்களுக்கு முன்பு வாழந்த மாணிக்கவாசக சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்'' என்றார்.

## கூட்டணி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லிம் தூதுக்குழு கூட்டணியிடம் வலியுறுத்தவுள்ளது.

கிழக்கிலங்கை முஸ்லிம மஜ்லிஸ் தலைவரும் காத்தான்குடிப்பட்டின சபை முன்னள் தலைவருமான ஜனப் ஏ. அஹமதுலெப்பை தலைமையிலான முஸ்லிம் தூதுக்குழுவே இன்று இச்சந்திப்பில் கலந்து கொள்கின்றது.

இதேவேளை மட்டக்களப்புப் பிரஜைகள் குழுவின் தலைவர் சட்டத்தரணி ஆ தங்கவடிவேல் தலைமையில் செல்லும் குழு நாளை புதன்கிழமை கொழும்பில் திரு. அமிர்தலிங்கத்தைச் சந்தித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அனர்த்தங்கள் குறித்து விவரிப்பார்கள். [மட்.நி.மா]


## நியூ விக்ரேஸ்

### புதிய வீடியோ பட வெளியீடுகள்

1. தாய்க்கு ஒரு தாலாட்டு (தரமான பிரதி)
   சிவாஜி கணேசன், பத்மினி, சுஜாத்தா, விசு.
2. சினிமா சினிமா (தரமான பிரதி)
   S. V. சேகர், கலைச்செல்வி,
   மோகன்குமார், காந்திமதி. (A-1003)



## தேவை - பெண் லிகிதர்

ஆங்கிலம், தமிழ் மொழிகளில் நல்ல அறிவும், அனுபவமும் உடையவரும், இரு மொழிகளிலும் தட்டச்சு வேலையில் திறமையுடையவருமான பெண் லிகிதர் உடன் தேவை விரும்புவோர் தங்கள் விண்ணப்பத்துடனும், சான்றிதழ்களுடனும் 27-7 86 காலை 9-00 மணிக்கு ஞானம்ஸ் ஹோட்டல் 59ம் நம்பர் காரியாலத்தில் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

இங்ஙனம்.
வடபிராந்திய லொறி, பஸ் போககுவரத்து ஒன்றியம்.
ஆ. மு. இராஜகோபால்
செயலாளர்.

[C 3632]



லிடோ
காலை 10-30, 2-30, 6-30
பாக்கியராஜ் சரிதா
நடிசத
மௌனகீதங்கள்
(கலர் - புதிய பிரதி)

வெலிங்டன
10-30, 2-30, 4-30, 6-30 P-M
முதல் முறையாக யாழ் நகரில் காண்பிக்கப்படுகிறது.
VENOM
Action - Thrill

கிளிநொச்சி மாணவர்கள்——

# தற்போது வதியும் இடங்களில் கல்வி கற்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், செவ். அண்மையில் கிளிநொச்சியிலேற்பட்ட அசம்பாவிதம் காரணமாக இயங்க முடியாமல் இருக்கும் சகல பாடசாலை மாணவர்களையும் அவர்கள் தற்போது வதியும் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கல்விஅதிகாரி ஜனுப் எம்.எம். மன்சூர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு ஜனுப் மன்சூரை அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடிய பொழுது பிரஜைகள் குழுவிடம்இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கிளிநொசசியில் இயங்கும் பாடசாலைகளில் மாணவர்களின் தொகைக்கேற்ப இயங்காத பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களை தற்காலிகமாக சேவையாற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இன்னும் இரு வாரங்களில் பாடசாலைகளின் இரண்டாம் தவணை விடுமுறை ஆரம்பமாக உள்ளதால் மேலேகூறப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் தான் அவசரம் காட்டவில்லையென்றும் தெரிவித்தார்.

மூன்றும் தவணை ஆரம்பத்தில் நிலவும் சூழ் நிலைக்கேற்பத் தாம் துரிதநடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் தற்பொழுது பளையில் இயங்கும் கல்விக் காரியாலயம் ஓர் தற்காலிக நடவடிக்கை என்றும் கிளிநொச்சிக் கல்விக் காரியாலயம் ஐம்பதிணுயிரம் ரூபா செலவில் திருத்தப்பட்டதாகவும் கூடிய விரைவில் கிளிநொச்சியில் கல்விப் பணிமனை இயங்கும் என்றும் தெரிவித்தார்.

## கல்வி அதிகாரியுடன் தொடர்பு கொள்ளலாம்

யாழ்ப்பாணம், செவ். கிளிநொச்சி, முல்லைத்தீவு கல்விபணிப்பாளர் ஜனுப் எம். எம்.மன்சூர் விசேடமாகச் சில விடயங்களையும் கூறினர். அதாவது பாடசாலை அதிபர்களோ ஆசிரியர்களோ மாணவர்களோ பாடசாலை சம்பந்தமான விடயங்களையோ, அவர்களது சப்பள விடயமான விடயங்களையோ, கல்வி சம்பந்தமான விடயங்களையோ அவர்களது பகுதியில் செயல்படும் கல்வி அதிகாரிகளுடன் தொடர்புகொண்டுஏற்ற நடவடிக்கை எடுக்கலாம் என்றும், இதைத் தவிர்த்து அதிபர்களோ, ஆசிரியர்களோ தனது கல்விக் கந்தோருக்கு அடிச்சடி வரவேண்டிய அவசியம் இல்லை என்றும் இருந்தும் தனது கல்விக்காரியாலயத்தை கிளிநொச்சியில் வைத்து நடத்தவே தான்

(7ம் பக்கம் பார்க்க)


இல்லத்தரசிகளுக்கு இதமான செய்தி

ஸ்னோவைட் விலைக் குறைப்பு!




SLS

ஸ்னோவைட்... அதே தரம்! அதே அளவு!
அதே சலவைச் சக்தி! அதே உன்னத சிக்கன நுரைப்பு!
ஆனால் மேலும் அதிக விலைக் குறைப்பு!
எல்லோருக்கும் பயன் தரும் நலம்!

ஸ்னோவைட் - அதன் குறைந்த விலை ரூ. 2/50

BCC பீ. சீ. சீ. வழங்கும் மற்றொரு தரமுயர்ந்த உற்பத்தி.

Ribbs N&L


# ஸ்தம்பித நிலையில் தொடர்ந்து கிளிநொச்சி நகர்

கிளிநொச்சி, திங்கள். கிளிநொச்சி நகரம் சடந்த ஒன்றரை மாதகாலமாக ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளதை தொடர்ந்து உருத்திரபுரம், வட்டக்கச்சி கிராமங்கள் நகரமாக மாறுகின்றன.

பல வர்த்தக நிலையங்கள் இக் கிராமங்களில் திறக்கப்பட்டுள்ளன. நடைபாதை வியாபாரிகளும் பெருமளவில் வியாபார முயற்சிகளில் ஈடுபட்டும் வருகின்றனர்.

நகரப்பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்கள் உருத்திரபுரம் பகுதியில் உள்ள வீடுகளில் வசித்தும் வருகிறார்கள்?

உருத்திரபுரத்திற்கு கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயமும் இடம்மாறி உள்ளது.

வைத்திய தேவைகளை நிறைவு செய்ய பெருந்தொகையான பொது மக்கள் உருத்திரபுரம் ஆஸ்பத்திரியை நாடியே செல்கின்றனர்.

## நூலகத்திற்கு புத்தகங்கள்

வவனியா, திங்கள். வவனியா நகரசபை நூல் நிலையத்திற்கு சுமார் பத்தயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் உள்ளூராட்சி திணைக்கள நிதியிலிருநது பெறப்பட்டுள்ளன.

இத்தகவலைவவனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.பி.கமலநாதன் தெரிவித்தார்.

## "கூட்டுறவு இயக்கம் வளர்ச்சிபெறவேண்டும்" — மேலதிக அரச அதிபர்

உடுவில், திங்கள். "தனியார் வர்த்தகத்துறையுடன் போட்டி போட்டு மேற்கு நாடுகளில் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியுற்றுள்ளமை போல எமதுநாட்டிலும் வளர்ச்சிகாண வேண்டும். அங்கு பொது மக்கள் கூட்டுறவு வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருப்பதுபோல நாமும் அதில அக்கறை கொண்டு வளர்க்கவேண்டும்"

இவ்வாறு சுன்னுகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஆதரவில் உடுவில் உபமொத்த நிலைய திறப்புவிழாவில் உரையாற்றிய யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. கா. இராமநாதன் தெரிவித்தார்.

சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு. சி. குமாரவேலு கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

மேலதிக அரசாங்க அதிபர் மேலும் தமது உரையில் இலங்கையின் கூட்டுறவு ளர்ச்சி பற்றி எடுத்துக்கூறியபோது "கூட்டுறவின் முதுகெலும்பாக விளங்குபவர்கள் அதன் ஊழியர்களே. எனவே அவர்களின் தரம் உயரவேண்டும். சேவைக்கேற்ப வேதனம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்" எனக்கூறினர்.

உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி திரு. பற்குணம் உரையாற்றுகையில் வர்த்தகர்கள் தம் இஷ்டப்படி உணவுப் பொருட்களில் செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தி மக்களை சுரண்டி வாழக்கூடாது எனவும் அவ்வாறு செயல்படுபவர்கள் தண்டிக்கப்படுவது உறுதி என்றும் கூறினர்.

## 2 கோடி ரூபா நிலுவை

ஊர்காவற்றுறை, திங்கள். "யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை, இலங்கை மின்சார சபைக்கு 2 கோடி ரூபா நிலுவை செலுத்த வேண்டியுள்ளது.

இவ்வளவு கூடுதல் தொகை செலுத்த வேண்டிய காரணங்களில ஒன்று சட்டவிரோத மின்பாவனையாகும்.


யாழ். செயலகத்தில் மின்சார அத்தியட்சகருக்கும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் நடந்தஆலோசனைக் கூட்டத்தில் இத்தகவல் பிரஸ்தாபிக்கப்பட்டது. இக் கூட்டத்தை கடந்த செவ்வாயன்று யாழ் அரசாங்க அதிபர் கூட்டியிருந்தார்.

## மண் எடுப்பதற்கு தடை

பண்டத்தரிப்பு, திங்கள் மாதகல் பகுதிக் கடற்கரைகளில் மணல் அள்ளுவதற்கு இளைஞர்கள் தடைவிதித்துள்ளனர் மாதகல், சப்பில்துறை சுழிபுரம், திருவடிநிலை ஆகிய இடங்களில் கடந்த காலங்களில் அதிகளவு மணல் அள்ளப்பட்டதனுல் கடல்நீர் இப்பகுதியிலுள்ள வயல்காணிகளுக்குள் புகுந்து விவசாயத்திற்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்தி வந்தது. இதனை அடுத்து தற்போது இப்பகுதிகளில் மணல் வண்டில்களிலும், ட்ராக்டர்களிலும் ஏற்றிச் செல்வதை இயக்கமொன்றை சேர்ந்த இளைஞர்கள் தடை செய்துள்ளனர்.

தடையைமீறி மணல்ஏற்றுவோருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படுவதோடு மணலும், பறிமுதல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## முதல் பரிசு



காப்புறுதியில் முன்னோடிகளான "இலங்கைக் காப்புறுதிக் கூட்டுஸ்தாபனம் 1985 ல் நடத்திய அமைப்பாளர்களுக்கு இடையிலான போட்டியில் திரு. சரவணமுத்து - சண்முகராஜா வடமாகாணத்தில் முதலாவது பரிசைப் பெற்றுள்ளார்.

இவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவரும், யாழ்/பரமேஸ்வராக் கலலூரியினதும் யாழ் தொழில் நுட்பக் கல்லூரியினதும் பழைய மாணவருமாவர்.

## அலங்கார உற்சவம்

வேலணை, திங்கள் வேலணை வங்களாவடி அருள்மிகு ஸ்ரீ முருகன் கோவிலின் வருடாந்த அலங்கார உற்சவம் இம்மாதம் 27 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவிருக்கின்றது.

## கல்வி அதிகாரியுடன்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

விரும்புவதாகவும் தெரிவித்தார்.

1986 ஆகஸ்ட் மாதம் ஆரம்பமாகவுள்ள க. பொ. த. உயர்தரப் பரீட்சை நிலையங்கள் மாற்றப்பட்டுள்ளதாகவும் ஆகஸ்ட் 10ம் திகதி ஆரம்பமாகவுள்ள 5ம் வகுப்புக்கான புலமைப் பரிசில் பரீட்சை நிலையங்களும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன் பிரகாரம் மாற்றம் செய்யப்பட்டுள்ள பரீட்சை நிலையங்கள் பின்வருமாறு:

க. பொ. த உயர்தரம் கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபம் ஒன்றும் இரண்டும் முரசுமோட்டை முருகானந்த வித்தியாலயத்தில் மாற்றப்பட்டுள்ளன. இது விஞ்ஞானம், கலைப் பிரிவு மாணவர்களுக்கு ஏற்புடையதாகும். சென் தெரேசா மகளிர் வித்தியாலய மண்டபம் கலைப் பிரிவு (தனிப்பட்ட பரீட்சார்த்திகள்) பளை மகாவித்தியாலய மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. 5ம் வகுப்புக்கான புலமைப் பரீட்சை நிலையங்கள் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளன. கிளிநொச்சி மகாவித்தியாலயம், கனகாம்பிகைகுளவித்தியாலயத்திற்கும் கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயம் பரந்தன் இந்து மகாவித்தியாலயத்திற்கும் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயம் உருத்திரபுரம் புனித பாத்திமா வித்தியாலயத்திற்கும் மாற்றப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் சகல பாடசாலைகளினதும் இரண்டாம் தவணைப் பரீட்சை செப்டம்பர் மாதம் 3ம் திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளது.

## மாவட்டத்தில் முதலிடம்



தேசிய சுகாதார விழாவையொட்டி யுனிசெப் நிறுவனத்தால் நடத்தப்பெற்ற யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பேச்சுப் போட்டியில் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி மாணவன் செல்வன் அ. மதிநாயகம் மேற்பிரிவில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். இவர் கல்லூரியில் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளிலும் பல பரிசில்களை பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விண்ணப்பப் படிவம் இல்லை

ஊர்காவற்றுறை, திங்கள்

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் ஊர்காவற்றுறை உப அலுவலகத்திலுள்ள நூலகத்தில் அங்கத்தவராகச் சேருவதற்குரிய விண்ணப்பப் படிவங்கள் இல்லை.

இதனால் பலபேர் நூலகத்தை பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளனர்.

## சப்பரத்திருப்பணி வேலைகள்

சுண்டுக்குளி, செவ்.

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவிலில் கடந்த இரண்டு வாரங்களாக சப்பரத் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. இக்கோவிலில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள வருடாந்த மகோற்சவ விழாவில் முதற்தடவையாக சப்பரத் திருவிழா நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஷெல்தாக்குதல் சிறுவன்காயம்

புலோலி, திங்கள்

பருத்தித்துறையிலிராணுவ முகாமிலிருந்து கடந்த சனியன்று மேற்கொள்ளப்பட்ட ஷெலதாக்குதலில் பருத்தித்துறை தம்பசெட்டியைச் சேர்ந்த விஸ்வநாதன் சந்திரகுமார் [வயது 11] காயமடைந்து பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## முல்லை மாவட்ட விளையாட்டுப் போட்டிகள்

முல்லைத்தீவு, திங்கள்.

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டி ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் கல்வி அதிகாரி இ. தியாகராசா தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தனராக கல்விப் பணிப்பாளர் ஜனப் எம். எம். மன்சூர் கலந்துகொண்டு பேசுகையில், விளையாட்டு நிகழ்ச்சிகள் ஒருபோதும் வீண் போவதில்லை என்றும் மாணவர்கள் ஒவ்வொருவரும் பாடசாலையில் உடற்பயிற்சிபெற வேண்டும் என்றும் கூறினர். 308 புள்ளிகளைப்பெற்று முல்லைத்தீவு மகாவித்தியாலயம் முதலாமிடத்தைப் பெற்றது.

## இன்றைய பலன்

மாதம்- ஆடி
திகதி- 6 (1986- 7- 22)
கிழமை- செவ்வாய்
திதி- பிரதமை பி. ப. வரை
நக்ஷத்திரம்- திருவோணம் பி இ. வரை

**மேடம்:** மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம், கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு. வாகன சுகத்துடன் வரவிலும் திருப்தியுண்டு.

**இடபம்:** புத்திரவழியால் புகழ் வந்துசேரும், வெளியூர் பயணமும் உண்டு, குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும், புதிய தொடர்புகளும் ஏற்படும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த முடிவுகள் ஏமாற்றத்தைத் தரலாம், எதிரிகளின் சூழ்ச்சி பலமாக இருக்கும். பழைய நினைவுகள் துன்பத்தைக் கொடுக்கும்.

**கடகம்:** களஸ்திரவழியால் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும், பெரியோர்களின் ஆதரவுகிடைக்கும், கண்ணியமான தினம்.

**சிங்கம்:** கழுகுப்பார்வை வட்டமிடும். கடமையில் தடைகள் ஏற்படும். நண்பர் ஒருவருடன் பகைத்துக் கொள்ளநேரிடலாம். முடிந்த வரையில் இன்று பிணக்குகளில் ஈடுபடாதிருக்கவும்.

**கன்னி:** இறைவழிபாடு மேலிடும், இதயத்தில் அமைதியும் ஏற்படும், பிதாவழி மூலமே நல்ல செய்தியும் கிடைப்பதற்கு இடமுண்டு, முதியவர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும்.

**துலாம்:** தொழில் பகுதியில் புதியவாய்ப்புகள் கிடைக்கும், எதிர்பாராத இடத்திலிருந்து அழைப்பிதழ் கிடைப்பதற்கான சந்தர்பமும் உண்டு, திடீர் வரவுமுண்டு.

**விருச்சிகம்:** புதிய தொழில் மூலம இலாபம் கிடைக்கும், புத்திரர்களுக்கு செல்வாக்குப் பெருகும், புதுமையான எண்ணங்கள் வட்டமிடும்.

**தனுசு:** எதிர்பாராத விளைவுகளமூலம் செலவுகள் அதிகமாகும், கடன்படவும் நேரிடும், பிணிக்கு இடங்கொடாது இருக்கவும்.

**மகரம்:** நான் என்ற அகம்பாவம் தலைதூக்கும், வேண்டியவர்களின் ஆலோசனையைக் கேட்காததால் பின்பு வருந்த நேரிடும், உணவு விடயத்தில் சுகாதாரம்வேண்டும்.

**கும்பம்:** குடுபத்தில் குதூகலநிகழ்ச்சிகள் இடம்பெறும், வெளியிடத்திலிருந்து மகிழச்சிகரமான செய்தியும் கிடைக்கும், பணவரவுமுண்டு.

**மீனம்:** சகோதர வழியால் மனதில் சஞ்சலம் தோன்றும், உள்வீட்டிலேயே பூசல்கள் தோன்றும், உசாரக இருக்க வேண்டும்.

**திருமலை ரவீந்திரன்**

## சால்புக்கு ஒருவர்



சால்புடைமையாகிய கடற்குக்கரை என்று சொல்லப்படுவர், ஊழிக்காலம் வந்துற்றபோதும் தம் நிலையில் இருந்தும் தவறவேமாட்டார் அது அவர்களது முதுசொம். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, ஆதியாம நற்பண்புகள் நல்லவர்களால் வரவேற்கப்படக்கூடிய உயர் தனிச் சிறப்புக்கு உரியவை. இந்த ஐம்பெருங்குணங்களும் பொருந்தியவர்களே சான்றுண்மையாளர்கள்.

உண்டிருந்து வாழ்வதற்கு உரைக்கின்றவர் மலிந்திருக்கும் உலகிலே சால்பு மிக்கவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களாகவே இருப்பார்கள். அப்படியானவர்களுள்ளே சால்புக்கு ஒருவர் என்று பாராட்டப்படக்கூடிய அளவுக்கு வாழ்ந்து காட்டியவர்களே இளைப்பாறிய பிரதம கணக்காளர் உரும்பிராய் திரு முருகேசு பசுபதி அவர்கள்.

திரு. பசுபதி அவர்கள் இவ்வுலகில்எழுபது ஆண்டுகள் வாழ்ந்த காலம் அவரது வாழ்க்கைமுறை எல்லார் உள்ளங்களையும் ஈர்ப்பதாக விளங்கியுள்ளது. தன்னுடைய உயர் வாழ்க்கை முறையை, மற்றவர் மீது திணிக்காமல் மற்றவர்கள் தாமாகவே பின்பற்றக் கூடியதாக வாழ்ந்தவர்கள். ''தாயைப் போலப் பிள்ளை, நூலைப்போலச் சீலை', என்பார்கள். திரு. பசுபதி அவர்களது பெற்றோர்களான முருகேசு ஆச்சிமுத்து தம்பதிகளின் வாழ்க்கையும் வறுமையிற் செம்மையானதாக அமைந்தது அந்தக் கண்ணியம் மிக்க பெற்றோருக்குப் பிள்ளையாய்ப் பிறந்த திரு. பசுபதி, படித்துக் கிளறிக்கல் உத்தியோகத்தில் சாதாரண குமாஸ்தாவாகச் சேர்ந்து பிரதம கணக்காளர் வரை உயர்ந்தார் என்றால் அதற்கு அவரது சுயமுயற்சியும், பண்பாடுகளுமே காரணம் எனலாம்.

### கல்விக் கூடங்கள்

திரு. பசுபதி அவர்களது உயர்வுக்கு அவரது அடிப்படைக் கல்வியே காரணம். சைவசமய அபிவிருத்தியின் பொருட்டு ஸ்தாபிக்கப் பெற்றது இந்துக்கல்லூரி அதிகார சபை. இச்சபையின் தாய்க் கல்லூரி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி. ஊர்கள் தோறும் கிளைப்பாடசாலைகள் இருந்தன. திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய் என்ற நல்நோக்க அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டது பரமேஸ்வராக் கல்லூரி. திரு. பசுபதி அவர்கள் ஆரம்பக் கல்வியை உரும்பராய் இந்துக் கல்லூரியிலும். இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், உயர் நிலைக் கல்வியை பரமேஸ்வராவிலும் பெற்றார். அங்கு இன்ரர் சயன்ஸ் சித்தி பெற்றவர்.

நாவலர் பெருமானவர்கள் சிவநாம பஜனையை நம் நாட்டில் ஊற்றெடுக்கச் செய்தார். அவர்வழியில் திரு. முருகேசு பசுபதியவர்கள் சிவநாம பஜனையை வலுவடையச் செய்தார். திரு. பசுபதியவர்களது குலதெய்வம் உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கருணாகரர் அவருக்கு என்றும் கண்கண்ட தெய்வம் இத்திருவாலயத்தில் அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே சிவநாமபஜனையை ஏற்படுத்தினர். திருவிளக்கேற்றும் தொண்டினையும் மேற்கொண்டார். இப்பணி இவ்வூரில் உள்ள பார்வதபத்தினி அம்மன் ஆலயம் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திலும் விரிவாக்கம் செய்யப்பட்டது, தம்மை இச்சிவப் பணியில் ஈடுபட வைத்தவர்கள் சங்கர சுப்பையர் அவர்களும் தந்தையார் தவசிப்பிள்ளை முருகேசு அவர்களுமே என்பார் திரு பசுபதியவர்கள். கொழும்பு விவேகானந்தசபை, அனுராதபுரம் விவேகானந்தசபை, உரும்பராய் இந்து சமயவிருத்திச் சங்கம், அநுராதபுரம் கதிரேசன் ஆலயபரிபாலன சபை முதலான ஸ்தாபனங்களில் அங்கம் வகித்து நற்சேவை புரிந்தவர்.

### சைவாசாரம்

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் திருப்பணிச்சபையின் கௌரவ தனதிகாரியாய் பல்லாண்டு பணியாற்றிய இவரின் சேவையை அவர் மேற்கொண்ட திருப்பணியென்றுமே சொல்லிக் கொண்டிருக்கும்.

அ. அமிர்தலிங்கம்

[திரு. மு. பசுபதி அவர்களது நினைவு அஞ்சலிக் கூட்டம் இன்று செவ்வாய் உரும்பராயில் நடைபெறுகிறது.]

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



**முத்துச்சாமிக் குருக்கள் சர்வேஸ்வரசர்மா**

(வருமானவரி அலுவலர்)

தோற்றம்: 09-03-1930
மறைவு: 02-08-1985
திதி: 23-07-86 (நாளை)

கற்றுவின் மனம் போலக்
கதறுதே யென் நெஞ்சம்
உற்றார் நீரொருவரல்லால்
வேறுதுணை யில்லேன்
பார்த்தாவே! பாதையை
இருளாக்கி
எங்கு சென்றனையோ.
நிர்க்கதியாகி
நிற்கின்றேன்
இது நீதியாகுமோ?
சிந்தையெலாம்
நும் நினைவை
நிலைநிறுத்தி
வந்தனை செய்யபல
நற்செயல்
புரிந்துவிட்டு
எந்தன் ஐயா எங்கே
மறைந்தனையோ
நொந்துயிர் சோரும்
என்னை
நின் கழல் சேர்ப்பாயே!

—மனைவி விமலா
111/2, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்

(C 3613)

## தேவை

### திருகோணமலை நிருபர்

'ஈழநாடு' தேசிய தமிழ்த் தினசரியின் திருகோணமலை மாவட்டச் செய்திச்சேவைக்கான நிருபர் உடன் தேவை. விண்ணப்பதாரிகள் தமிழ், ஆங்கில மொழித் தேர்ச்சயும் சிறந்த கல்வித்தகைமையும் செய்திச்சேவையில் அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் சான்றிதழுடன் பிரதியை இணைத்து சொந்தக்கையெழுத்தில் சுயவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்கள் 31-07-1986 வியாழக்கிழமைக்குப் பிந்தாமல் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும் விண்ணப்ப மேலுறையின் இடதுபக்க மேல்மூலையில் 'திருகோணமலை நிருபர் பதவி' என்று குறிபபிடுதல் அவசியமாகும்.

நிர்வாகி,
ஈழநாடு லிமிட்டெட்,
த. பெ. இல. 49,
யாழ்ப்பாணம்.

[A-948]

## 30-ம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி நாகலிங்கம் சிவபாக்கியம்**

தோற்றம்: 05-02-1892
மறைவு: 22-07-1956

புலோலி கிழக்கு பருத்தித்துறை பசுபதீஸ்வரர் தேவஸ்தான உரிமையாளரும், காலஞ்சென்ற இராமசாமிச் செட்டியார் பார்வதிப்பிள்ளை ஆகியோரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற நாகலிங்கமுதலியாரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், மங்கையர்க்கரசியின் சிறிய தாயுமாவார்.

அன்னாரை நினைவுகூரும்:
பிற்சந்ததியினர்.
''பாக்கியவாசா'',
செட்டித்தெரு,
பருத்தித்துறை.

(C 3603)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
செவ்வாய்க்கிழமை 22-7-86

# ஆனையிறவை கடக்கும் வாகனங்களுக்கு இலகுமுறையில் அனுமதிச்சீட்டு

(யாழ்ப்பாணம்)

**ஆனையிறவைக்கடந்து செல்லும் லொறிகள் இலகுவான முறையில் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த அனுமதிப்பத்திரத்தை யாழ். கோட்டையில் பெற்றுக்கொள்ளலாம்.**

ஆனையிறவுக்கு அப்பால் செல்லும் லொறிகள் அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்கான விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்திசெய்து வடபிராந்திய லொறி, பஸ் போக்குவரத்துச்சங்கங்களின் மூலம் இலகுவான முறையில் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களைப் பெறமுடியும்.

இந்த முறையிலான அனுமதிப்பத்திரம் வழங்கும் முறையை கோட்டை இராணுவ அதிகாரி மேற்கொண்டுள்ளார்.

வடபிராந்திய லொறி, பஸ் போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதிகளை யாழ் கோட்டை இராணுவ அதிகாரி நேற்றுக் கோட்டைக்கு வருமாறு அழைத்து நடாத்திய பேச்சுவார்த்தையையடுத்தே இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதென வ பி லொ. ப. போ. சங்கத்தலைவர் திரு சி அழகானந்தம் தெரிவிக்கின்றார்.

இலகுவான முறையில் அனுமதிப்பத்திரங்களைப் பெறவும் மேலதிக விபரங்களை அறியவும் மேற்படி சங்ககாரியாலயத்துக்கு வாகன உரிமையாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். [ஐ]

## கொள்ளை

ஊர்காவற்றுறை, திங்கள்

ஊர்காவற்றுறை கிழக்கைச் சேர்ந்த டெலிமா என்பவரின் வீட்டில் சேலைகள், மின்சார உபகரணங்கள் போன்ற பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

## மட்டு மாநகர ஆணையாளரை இடம் மாற்றுவதற்கு மக்கள் ஆட்சேபம்

மட்டக்களப்பு, செவ்வாய்

மட்டக்களப்பு மக்களின் முன்னேற்றம் கருதிப் பலவழிகளிலும் அயராது உழைத்து வந்த மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் திரு. பெனடிக்ற் தார்ஸியஸின் இடமாற்றத்தை உடனடியாக ரத்துச் செய்யக்கோரி பிரதம மந்திரிக்கு அப்பகுதிப் பொதுமக்கள் மகஜாரொன்றை அனுப்பியுள்ளார்கள்.

மட்டக்களப்பு உதவி அரசாங்க அதிபர் திரு. சி அந்தோனிமுத்து ஊடாக பிரதமருக்கு இம்மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. [வா]

## 'ஹெலி'யிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம்

வேலணை, திங்கள்

ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் சுற்றி வட்டமிட்ட ஹெலிகப்ரர் ஒன்று இயந்திரத் துப்பாக்கி மூலம் சரமாரியாக சுட்டதில் பல வீடுகளின் ஓடுகள், யன்னல்கள் சேதமாகியுள்ளன.

இதேவேளை ஊர்காவற்றுறையிலுள்ள வர்த்தக ஸ்தாபனமொன்றிற்கு லொறியில் வந்த உணவுமூடைகள் இறக்கப்பட்டுக் கொண்டிருந்த சமயம் லொறிமீது 'ஹெலி'யிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் லொறியின் முன்பக்கக் கண்ணாடி நொருங்கியது.

## ● தீர்வுக்கான அடிப்படை இல்லை

# 'ஜனாதிபதியின் யோசனைகளை நிராகரிக்கிறோம்!' - வட மாகாண ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

''தற்போதுள்ள சூழ்நிலையால் ஜனாதிபதியால்முன்வைக்கப்பட்டுள்ள மாகாணசபை ஆலோசனை இனப் பிரச்னை தீர்வுக்கான குறைந்தளவு அடிப்படை அம்சங்களையேனும் உள்ளடக்கியதாக இல்லையாதலால் நாம் இந்த யோசனைகளை நிராகரிக்கிறோம்.''

இவ்வாறு, இலங்கை ஆசிரியர் சங்க வடபிரதேசக் கிளையான வடமாகாண ஆசிரியர் சங்க செயற்குழுக்கூட்டத்தில் மாகாணசபை பற்றி பிரேரணை நிறைவேற்றப் பட்டது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் விபரம் பின்வருமாறு;-

இன்று இலங்கையின் இனவாத முதலாளித்துவ அரசு இராணுவத்தின் உதவியுடன் வடக்கு, கிழக்கில் உள்ள அப்பாவிக் குடிமக்களை தொடர்ச்சியாக கொன்றுகுவித்து வருகின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களை ஒரு தேசிய இனம் என்றும், அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டென்றும் எமது சங்கம்உறுதியாகஏற்றுள்ளது.

எனவே இனப்பிரச்னையை தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைக்கு முன்வைக்கப்படும் எந்த ஒரு சமாதானத் தீர்வும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை தமிழ்ப்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமாக ஏற்றுக்கொள்வதன் அடிப்படையிலேயே முன்வைக்கப்படவேண்டும். தற்போது ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் மேற்கூறியவற்றை ஏற்கவில்லை என்பது வெளிப்படை.

சுதந்திரத்தின் பின் கடந்த 39 ஆண்டுகளாக மக்களின் உரிமைகள் பாராளுமன்ற சட்டங்களாலும், அரசியல்அமைப்புக்களாலும் பதவிக்கு வந்த அனைத்து அரசாங்கங்களினாலும் தொடர்ச்சியாகப் பறிக்கப்பட்டுவந்துள்ளன. [ஐ]

## மரண அறிவித்தல்

### வீரகத்தி கதிரவேலு

(பெருந்தெருக்கள் திணைக்கள புத்தளம் களஞ்சியப் பொறுப்பாளர்)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் - பழைய வீதி வாசியுமான வீரகத்தி கதிரவேலு 15-7-1986 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19-7-1986 சனிக்கிழமை கோப்பாயில் நடைபெற்றன. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

பழைய வீதி,
கோப்பாய்.

தகவல்:
மகள் ஜெசல்யா கதிரவேலு.

(C3627)

### பரமேஸ்வரி வோல்ரன்

பரமேஸ்வரி வோல்ரன் [டபிள்யூ. ரி. சி. கபோமோ - நைஜீரியா, முன்னைநாள் ஆசிரியை புனித் தர்வல் கல்லூரி - மிலாகிரியா, சுண்டுச்குளி மகளிர் கல்லூரி] கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தார். இவர், காலஞ்சென்ற டானியல் வோல்ரன் [உதவி பதிவாளர் நாயகம்] காலஞ்சென்ற ஹரியந் ஜெயமணி ஆகியோரின் அன்பு மகளும், திருமதிகள் ஜி. ஈ எஸ் செல்லையா (இளைப்பாறிய அதிபர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஈ. வி. ஏ அழகரட்ணம், வைத்திய கலாநிதி திருமதி மனோ பேரின்பநாயகம் [லண்டன்] ஆகியோரின் அன்புச் சகோதரியும். திருவாளர்கள் ஜே. ரி. செல்லையா, எம். டபிள்யூ அழகரட்ணம். வைத்திய கலாநிதி சவுந்தி பேரின்பநாயகம் ஆகியோரின் மைத்துனியுமாவார். நல்லடக்கம் லண்டனில் நடைபெறும். [C3610]

### ஸ்ரீ சுப்பிரமணியம் கமலாம்பிகை

ஸ்ரீ சுப்பிரமணியம் கமலாம்பிகை இளைப்பாறிய ஆசிரியை தனது இல்லத்தில் சனிக்கிழமை இரவு காலமானார். அன்னார் காலம் சென்ற புகையிரதநிலைய அதிபர் ஸ்ரீசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் திருமதி வீரசிங்கத்தின் அன்பு மகளும் செல்வி றேனுகா [ஆசிரியை சகிராக்கல்லூரி தர்கா நகர்] யின் அன்புத் தாயாரும் காலம் சென்ற ஆசிரியை சாவித்திரி நடராசா, ஆசிரியை சாரதாதேவி சிவஞானசுந்தரம், பொறியியலாளர் பாலசிங்கம், பாலம்பிகை சந்திரசேகரம் பேராசிரியர் குமாரசிங்கம் ஆசிரியை பொன் மயிலாம்பிகை வேலாயுதபிள்ளை ஆசிரியர் நரசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவர் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 23-7-86 புதன் கிழமை காலை 10 00 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து முள்ளானை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக கொள்ளவும்.

மினேவா கோம்,
முள்ளானை - இளவாலை.

[C-3635]

## வர்த்தகர் கடத்தல்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ். நவீன சந்தையிலுள்ள வியாபார ஸ்தாபனத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை காலை குறிப்பிட்ட ஒரு இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் இதனால் இவ்வியாபார ஸ்தாபனம் நேற்றுத் திறக்கப்படவில்லை. [ஐ]

## தலவாக்கொல்லையில் பெண் இம்சை: விசாரிக்கப்படும்

கொழும்பு, செவ்வாய்

தலவாக்கொல்லை ஆசிரிய பயிற்சிக் கல்லூரிப் பயிற்சி ஆசிரியையான தமிழ்ப் பெண் பஸ்ஸில் செல்லும் போது காடையர்களால் கடத்தப்பட்டு இம்சிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணையொன்றைக் கல்வி அமைச்சு நடாத்தவுள்ளதாகக் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் திரு ஜே. டி. எம் துப்புக்கொல தெரிவித்துள்ளார். [வா]

## ஜூலை 25-ம் திகதி

# ஆலய மணிகளை ஒலித்து மௌன பிரார்த்தனைசெய்க

## அன்னையர் முன்னணி அறிவிப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

வரும் 25 ம் திகதி நண்பகல் 12 மணிக்கு சகல ஆலயங்களிலும், தேவாலயங்களிலும் முதல் இரண்டு நிமிடம் மணிகள் ஒலிக்கப்பட வேண்டும் என்றும் அடுத்த மூன்று நிமிடங்களுக்கும் மக்கள் அனைவரும் தமது அலுவல்களை நிறுத்தி எழுந்து நின்று மௌனப் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும் என்றும் அன்னையர் முன்னணி வேண்டுகோள்விடுத்துள்ளது.

அரச அட்டூழியங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் வன்செயல்களில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தவும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "ஒழுங்குமீறிய ரி.வி.காட்சி: எழுத்தில்முறைப்பாடு தருக"

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஒழுங்கு மீறிய தொலைக் காட்சிச் சேவைகள் மீதான ஒழுங்கு நடவடிக்கை மேலும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாகவும் இதுபற்றிய முறைப்பாடுகளை எழுத்து மூலமாக மக்களிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் 'தமிழீழ மாணவர் பேரவை' [ரெஸோ] தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக 'ரெஸோ' விடுத்துள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''கடந்த 7ம் திகதி இரவு உள்ளூர்த் தொலைக் காட்சிச் சேவைகள் மீது நாம் நடத்திய திடீர் பரிசோதனையின் போது ஒழுங்கு மீறிய சேவையாளர்களிடமிருந்து சீல் வைத்துப் பறிமுதல் செய்யப்பட்ட சேவை உபகரணங்கள் யாவும் 14 ம் திகதி நடைபெற்ற விசாரணையின் பின்னர் எச்சரிப்புடன் மன்னிப்பு வழங்கப்பட்டு குறைந்தளவிலான அபராதத்துடன் அவர்களின்பொருள்கள் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது.'' [மா]

# ராகிங் அசம்பாவிதம் புலிகள் கண்டனம்

யாழ்ப்பாணம், செவ்

ராக்கிங் என்ற பெயரில் இடம்பெறும் வன்முறைஅட்டகாசங்கள் சம்பந்தமாகவும் இதன்போர்வையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஆதாரபூர்வமான சில மோசமான சம்பவங்களை மேலும் தொடரவிடாமல் தடுக்கவும் விடுதலைப்புலிகள் இன்று அறிக்கை ஒன்றை விடுக்கவுள்ளனர்.

ராக்கிங் என்றபோர்வையில் சில தீயசக்திகளின் நடவடிக்கைகளால் மாணவர்கள் உடலியல், உளவியல் ரீதியாக மிக மோசமாக பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்த அறிக்கை நாளை புலிகளால் வெளியிடப்படும். [மா]

## தலையற்ற உடல் கரை ஒதுங்கியது

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவு மேற்கு வெல்லைப் பகுதியைச் சேர்ந்த கடற்கரையில் தலையற்ற மனித உடல் ஒன்று மிகவும் அழுகிய நிலையில் கரை ஒதுங்கக் காணப்பட்டது.

அண்மைக் காலங்களில் கரை ஒதுங்கிய சடலங்களில் இது பதினொராவது சடலமாகும்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram Eelanadu, Telephone 22389, 84126